இந்து தமிழ்
THE HINDU

# உலக ஓசோன் பாதுகாப்பு தின விழிப்புணர்வு சுவரொட்டி வெளியீடு

**கோவை:** கோவை ஆர்.எஸ்.புரத்தில் உள்ள வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தின் (ஐஎஃப்ஜிடிபி) கீழ் செயல்பட்டுவரும் சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையத்தில் (என்விஸ்) ஓசோன் பாதுகாப்பு தினம் ஆன்லைனில் கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்ச்சியை தொடங்கிவைத்து ஐஎஃப்ஜிடிபி இயக்குநர் சி.குன்னிகண்ணன் பேசும்போது, மனிதர்களால் மேற்கொள்ளப்படும் பல்வேறு நடவடிக்கைகள் காரணமாக ஓசோன் அடுக்கு குறைவதற்கான காரணங்கள், அதனால் ஏற்படும் விளைவுகள், ஓசோன் அடுக்கின் முக்கியத்துவம் குறித்து விவரித்தார். தொடர்ந்து 'உலக ஓசோன் தினம்-2020' கருப்பொருளை சிறப்பிக்கும் விழிப்புணர்வு சுவரொட்டி வெளியிடப் பட்டது. இந்த நிகழ்ச்சியில், என்விஸ் திட்ட அலுவலர் எஸ்.விக்னேஸ்வரன், ஒருங்கிணைப்பாளர் கண்ணன் சி.எஸ். வாரியர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். ஓசோன் பாதுகாப்பு தொடர்பாக ஆன்லைனில் நடைபெற்ற விழிப்புணர்வு விநாடி-வினா போட்டியில் சுமார் 1,000 பேர் பங்கேற்றனர். அவர்கள் அனைவருக்கும் மின் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

227. News in Hindu (Tamil), Coimbatore, 18.09.2020, Observance of World Ozone Day by IFGTB ENVIS.